Registered as a Newspaper

A/L 88
DAY CLASS
10 - 30:- காவிகள்
11 - 45;- திரிகோண கணிதம்
ஆரம்பம்: 3.9-87
திரு. ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

# உதயன்


உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1-50

A/L 89
சனி, ஞாயிறு வகுப்பு
7-30:- தொடர்புவேகம்
8-45;- மீதித்தேற்றம்
ஆரம்பம்:- 6.9.87
திரு. ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆவணி மீ 14 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 04 (30 - 08 - 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 236

# ஊர்காவலின் ஆயுதங்கள் மீளப்பெறும் காலம் நீடிப்பு



வங்கியாளர்கள் - வர்த்தகர்கள் சந்திப்பு ஒன்று சமீபத்தில் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் இடம்பெற்றது இலங்கை வர்த்தக வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு. எட்ஹார் குணசிங்கா (மத்தியில்) உரையாற்றுகிறார். படத்தின் இடதுபுறத்தில் வர்த்தக வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் திரு. எஸ். இராகவன், வலதுபுறத்தில் சீமா சில்க் அதிபர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் ஆகியோர் காணப்படுகின்றனர்

## போராளிகள் ஒப்படைத்தது குறைவு என்கிறார் சிறில் ரணதுங்கா

கொழும்பு, ஆகஸ்ட் 30

ஊர்காவல் படையினரிடமிருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறுவதற்கான கால எல்லை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், அது கைச்சாத்தான 120 மணி நேரத்துக்குள் போராளிகள் தமது ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். அதேகால எல்லைக்குள் ஊர்காவல் படையினரின் ஆயுதங்களும் திரும்பப் பெறப்பட்டு படை கலைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு மாதம் கடந்தும் ஊர்காவற் படையின் ஆயுதங்கள் இன்னமும் முற்றாகத் திரும்பப் பெறப்படவில்லை. படை கலைக்கப்படவும் இல்லை. அதற்குப் பதில் ஆயுதங்களை திரும்பப் பெறும் காலத்தை அரசாங்கம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்திருக்கிறது.

போராளிகள் ஆயுதங்களை கையளிப்பதில் ஏற்பட்டுவரும் தாமதத்தைக் கருதியே அரசாங்கமும் ஊர்காவல் படையினரிடமிருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறுவதில் சுணக்கம் காட்டி வருகிறது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதேவேளை கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்கா, சென்னைத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில், போராளிகள் ஒப்படைத்த ஆயுதங்கள் மிகக் குறைவு என்று தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்த தகவலின்படி, ஊர்காவல் படையினரிடம் இருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறுவது அடுத்த (செப்டம்பர்) மாத இறுதி வரை தொடரும்.

இதுவரை சுமார் பத்தாயிரம் ஊர்காவல் படையினர் துப்பாக்கிகளை ஒப்படைத்துவிட்டனர்.

வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் மட்டும் பதினையாயிரம் வரையிலான ஊர்காவல் படையினர் பணிபுரிந்துவந்தனர்.

இது இவ்வாறிருக்க- ஊர்காவல் படையிடமிருந்து ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுகின்றன என்று இலங்கை ஆயுதப் படைகளின் கூட்டுத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்கா சென்னை தொலைக்காட்சிக்கு அளி

(6ஆம் பக்கம் பார்க்க)

## 250 பேர் பலி!

டாக்கா, ஆக. 20

பங்களாதேஷில் பூரி—கங்கா ஆற்றில் இழுவைப் படகு ஒன்று நீரில் மூழ்கியதில் 250 பேர் பலியாகியதாக அறிவிக்கப்படுகின்றது. [உ]

## பிரெஞ்சுக்குழு வடமராட்சியில்

யாழ்ப்பாணம், ஆக 30

பிரெஞ்சு தூதரக அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்தது.

இக்குழு வடமராட்சிக்குச் சென்று அங்கு பல பகுதிகளையும் பார்வையிட்டது. [உ-ஒ]

## அமெரிக்காவின் இராணுவ உதவி

கொழும்பு, ஆக 30

ஸ்ரீ லங்கா விமானப் படையின் பெல் ஹெலிக்கொப்டர் திருத்துவதற்காக 5 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்கள் அமெரிக்கா வழங்கியிருக்கிறது.

ஸ்ரீலங்கா-இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர் அமெரிக்கா வழங்கும் முதல் தொகுதி இராணுவ உதவி இதுவாகும். (உ)

## லலித் தேறுகின்றார்

கொழும்பு, ஆக. 30

அமைச்சர் லலித் அத்துலத்முதலி, தீவிர கண்காணிப்பு வார்ட்டில் இருந்து வேறு ஒரு வார்ட்டுக்கு மாற்றப்பட்டார்.

புண்கள் ஆறிவிட்டன. வழமைபோன்று உணவு அருந்த ஆரம்பித்து விட்டார். இனி அவர் தீவிரக் கண்காணிப்பில் இருக்கவேண்டிய அவசியமில்லை— இப்படி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிப் பேச்சாளர் சொன்னார். (உ-எ)

## சுபநேரம்

30-8-1987
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.05 முதல் 10.35 வரை
ராகுகாலம்:-
4.35 முதல்- 6.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஷஷ்டி விரதம்

பாதிப்புற்ற பாடசாலைகளை புனரமைப்பது பற்றி ஆராய

## கல்வி அமைச்சர் ரணில் நாளை வடக்கே விஜயம்

### பலாலியில் அதிபர்களுடன் சந்திப்பு

பலாலி, ஆக, 30.

வடபகுதியில் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்பது சம்பந்தமான, நிலைமைகளை நேரில் அறிந்து கொள்ள கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நாளை வட பகுதிக்கு வருகை தருகின்றார்.

கடந்த நான்கு ஆண்டு காலங்களில் இராணுவ நடவடிக்கைகளால் வட பகுதியில் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களையும் அவற்றை புனரமைப்பது பற்றியும்—

பாதிப்படைந்த பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுடனும் நேரடியாக கலந்தாலோசிக்க வடபகுதிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் ஜவுப் எம். எம். மன்சூர் கல்வி அமைச்சரை வேண்டியி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 345 தமிழ்க்கைதிகள் நேற்று விடுவிப்பு

### விரைவில் மேலும் 1, 200 பேர் விடுதலை

கொழும்பு, ஆக. 30

இரண்டாம் கட்டமாக தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் பணி மீண்டும் நேற்று ஆரம்பமானது.

தென் இலங்கையில் உள்ள பூஸா தடுப்பு முகாமில் இருந்து நேற்று 345 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இந்திய அமைதிப் படையினர் அவர்களைப் பொறுப்பேற்று காலித் துறைமுகத்துக்குக் கொண்டுவந்தனர்.

அவர்கள் பின்னர் இந்தியக் கடற்படைக் கப்பலில் ஏற்றப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேலும் 600 தமிழ் அரசியல் கைதிகள் அடுத்த புதன்கிழமை பூஸா, பெலவத்தை முகாம்களில் இருந்து விடுவிக்கப்படுவர்.

மற்றொரு தொகுதியில் மேலும் 600 தமிழ்க் கைதிகள் பின்னர் விடுவிக்கப்படுவர்.

முதற்கட்டமாக 1,248 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். (உ-எ)

## ஈழவர் முன்னணி ஆதரவில் நேற்று நடைபெற்ற பேரணி!

யாழ்ப்பாணம், ஆக. 30

ஈழவர் முன்னணி நேற்று நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ லங்கா அரசின் ஒப்பந்த மீறலை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

நாச்சிமார் கோவிலடியில் இருந்து மேற்படி பேரணி ஆரம்பமானது.

பேரணி காங்கேசன் துறை வீதி வழியாகச் சென்று யாழ்ப்பாணக் கோட்டை முகாமை அடைந்தது.

அங்கு, இந்திய அமைதிப்படையின் அதிகாரி மேஜர் ஹர்கீத்சிங்கிற்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்று உயர் அதிகாரி ஒருவரிடம் கையளிக்கப்பட்டது.

★ சிறைக் கைதிகள் அனைவரும் துரிதமாக விடுவிக்கப்பட வேண்டும்.

★ அவர்கள் விடுவிக்கப்படும்வரை, தமிழ்—சிங்கள மொழி பேசும் மக்களின் அரசுசார்பற்ற பிரதிநிதிகளையும், சமாதானப் படையையும் உள்ளடக்கிய கண்காணிப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு சிறை

(6ஆம் பக்கம் பார்க்க)

## தோப்பூரில் பேரணியின் போது சூடு

யாழ்ப்பாணம், ஆக. 30,

ஸ்ரீலங்கா - இந்திய ஒப்பந்தத்தை ஸ்ரீ லங்கா அரசு மீறுகிறது எனத் தெரிவித்து, அதனைக் கண்டிக்கும் வகையில் ஈழவர் முன்னணி நேற்று தோப்பூரில் பேரணி நடத்திய வேளையில் ஸ்ரீலங்கா படையினர் வானத்தை நோக்கி வேட்டுகளை தீர்த்தனர்.

இந்தப் பேரணி தோப்பூர் பிள்ளையார் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகி, கட்டைபறிச்சான் பிள்ளையார் கோவிலில் முடிவுற்றது.

பேரணி தோப்பூர் முகாமுக்கு முன்னால் வந்த போதே வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

தவறுதலாக வேட்டுகள் தீர்க்கப்பட்டதாக பின்னர் தெரிவிக்கப்பட்டதாம்.

பேரணியில் கலந்து கொள்வதற்காக பட்டித்திடலில் இருந்து வந்த மக்கள் மீது கட்டைபறிச்சானில் வைத்து கல் வீசப்பட்டது.

இதேவேளை பேரணி

(6ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் பாரதி விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம், ஆக. 30

செய்தி சேகரிப்பதற்காக திருகோணமலைக்குச் சென்று கொண்டிருந்த முரசொலிப் பத்திரிகையின் செய்தியாளர் இ. பாரதி (வயது 24) விபத்தில் சிக்கி காயமடைந்தார். அவருடன் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த மேலும் இரண்டு பேர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பேயாடிக் கூழாங்குளத்தில் நடந்தது.

இவர்கள் சென்று கொண்டிருந்த பஸ்ஸை லொறி ஒன்று முந்திக் கொண்டு கடந்து செல்லும் போதே இந்த விபத்து நடந்தது. (உ-ஒ-7)

நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம்
மூன்றும் தவணைக்காகப் பாடசாலை
திறத்தல் பற்றிய
முக்கிய அறிவித்தல்

31-08-87 திங்கட்கிழமை :

காலை 7-30 மணிக்கு : 6ஆம் ஆண்டு தொடக்கம் 11ஆம் ஆண்டு வரையுமான சகல பெண்களுக்கும், 12ஆம், 13ஆம் ஆண்டு ஆண் — பெண் சகலருக்குமான விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

நண்பகல் 12-00 மணிக்கு : 6 ஆம் ஆண்டு தொடக்கம் 11ஆம் ஆண்டு வரைக்குமான ஆண்களுக்கும், 12ஆம், 13ஆம் ஆண்டு ஆண் — பெண் சகலருக்குமான கலை, வர்த்தக பிரிவு வகுப்புக்களும் ஆரம்பமாகும்.

இவ்வகுப்புக்கள் வித்தியாலயத்தின் பெண்கள் பிரிவில் ஆரம்பமாகும்.

சகல மாணவர்களும், ஆசிரியர்களும் குறித்த நேரத்திற்கு வருகை தரவும்.

—அதிபர்—

முச்சந்தி முரளி



ஏட்டிக்குப் போட்டியாய் அரசாங்கமே நடக்குது எண்டால் பிறகு என்னெண்டு ஒப்பந்தம் சரிவர அமுலாகப் போகுது......?

## 2ஆயிரம் பஸ்கள் தேவை; உதவி கேட்டு ஜெனி புதுடில்லி செல்வார்

சென்னை, ஆக. 30

1989ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கைக்கு இரண்டாயிரம் பஸ்கள் தேவை.

இவற்றைப் பெறுவது சம்பந்தமாக இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்த நிதி அமைச்சர் ஜெனி டிமெல் சில தினங்களில் புதுடில்லி வருவார்

—இப்படிப் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். மூஹம்மது சென்னையில் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

அடுத்த ஆண்டுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுத ஒப்படைப்பில் திருப்தி கண்டாலே தீவிரவாதிகள் விடுதலை!

கொழும்பு, ஆக. 30

தமிழ்த் தீவிரவாதிகளின் ஆயுத ஒப்படைப்பில் திருப்தி கண்ட பின்னரே கடும் போக்குக் கொண்ட தமிழ்த் தீவிரவாதிகளை அரசு விடுவிக்கும்.

இப்படி கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடும் போக்கான தமிழ்த் தீவிரவாதிகள் இன்னும் தடுப்பு முகாம்களிலும், சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் ஆயுதங்களை ஒப்படைத்து வருகின்றனர்.

இந்த ஒப்படைப்பில் அரசு திருப்தி கண்ட பின்னர்தான் தடுத்து வைக்கப்பட்டு உள்ள கடும் போக்குத் தீவிரவாதிகளை அரசு விடுவிக்கும்.

இப்படி அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ-எ]

## கொழும்பு மினிபஸ் விபத்து! இருவர் பலி!

### மாங்குளத்துக்கு அருகில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 30

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் மரணமானார்கள்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 6.15 மணியளவில் மாங்குளத்துக்கு அண்மையில் இடம்பெற்றது.

விபத்து நடந்த இடத்தில் ஒருவர் மரணமானதாகவும், மற்றவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு மரணமானதாகவும் தெரியவருகிறது.

இறந்தவர்களில் ஒருவர் வேலணையைச் சேர்ந்த மதியாபரணம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

காயமடைந்த பலர் கிளிநொச்சி, யாழ்ப்பா

[6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அச்சக உரிமையாளர்களே! உங்களுக்குதேவையான பிறிஸ்ம் மையினை எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள். கூடிய தொகைக்கு விசேட கழிவு உண்டு. தயா அச்சகம், 138, நாவலர்வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம். [1562]

## புத்தகம்

ஆங்கிலத்தைத் தங்கு தடையின்றி பேசுவதற்கு தமிழில் அதே ஒலியுடன் சொற்கள், வசனங்கள், கருத்துக்கள் தரப்பட்டு தரமான நூலாக வெளிவந்துள்ளது. ''மத்திய பிரதேச நாடுகளில்வேலை பெற ஆங்கிலம்'' தனிப்பிரதி 50/— ரூபா. தபாலில் பெறுவதாயின் அறுபது ரூபா மணியோடர் அனுப்பவும். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். டேவிட் லிகோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (1582)

உங்கள் பிறந்த திகதியிலும் பெயர் அமைப்பிலும் பொதிந்துள்ள துர்ரதிஷ்டங்களைக் கண்டறிந்து பிறந்ததிகதிக்கேற்ப பெயரை அதிர்ஷ்டநாமமாக அமைத்து மகிழ்ச்சிகரமாக வாழ வழிகாட்டும் உன்னதமான நூல் "வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி' தனிப்பிரதி 6-50 பூபாலசிங்கம் புத்தகசாலை, ராஜன் புத்தகசாலை. கிருஷ்ணசாமி புத்தகசாலை. யாழ்ப்பாணம். லக்ஷ்மி ஸ்டோர்ஸ், நெல்லியடி, நாயகபாலன் ஸ்டோர்ஸ் மானிப்பாய். [r571]

பற்றறி சார்ஜர் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். சென் பற்றிக் சந்தியருகில். (1579)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் அலுமாரி, கட்டில், மெத்தைகள், Show-Case, பற்றறிசார்ஜர், Chopper சைக்கிள், சாப்பாட்டு மேசை கதிரைகள், கேக்மிக்சர், Baby Cot, ஹோல்செற், பிளாஸ்ரிக் கதிரைகள், Meat Safe, Stand Fan, கிளாஸ் வகைகள் மற்றும் பல உடன் மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென் பற்றிக் சந்தியருகில். (1580)

குடும்பத்தில் உள்ள பெரியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் மூன்று பிரிவினருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் விதமாக உங்கள், அபிமான எழுத்தாளர்களின் முத்தான கதைகளுடன் OCTOBER முதல் வெளிவருகிறது ''முல்லை''. மாதம் ஒரு நாவல். தபாலில் பெறுவதாயின் பத்து ரூபா முத்திரைகள் அனுப்பவும். இலங்கை முழுவதும் விற்பனையாளர்கள் தேவை. டேவிட் லிகோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (1583)

## திருமண சேவை

பொறியியலாளர்கள், வைத்திய கலாநிதிகள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், தனியார் துறை ஊழியர்கள், தாரமிழந்தவர்கள், விதவைகள், வெளிநாடுகளில் நிரந்தர வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் ஆகிய தரத்திலுள்ள ஆண், பெண் மணமக்கள் எம்மிடம் இருக்கிறார்கள். விண்ணப்பிக்கவும். விளம்பர எண்: 65, மே/பா. உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1578)

## அறிவித்தல்

என்னுடைய அம்பாள் மஹோற்சவ பத்ததியை வைத்திருப்பவர்கள் தயவு செய்து உடன் கொண்டு வந்து தரவும். அவசியம் என் மாணவர்கள் இதைக் கவனிக்கவும். தா. மகாதேவக்குருக்கள், கண்ணகைஅம்மன் கோவில், இணுவில். (1570)

## சேவை

இரண்டு நாட்களில் கலர் சுருள்கள் படமாக்கித் தரலாம். வீடியோவில் படங்கள் பிடித்துக் கொள்ளவும், படங்களுக்கு பிறேம் செய்யவும், கறுப்பு, வெள்ளை கலரில் படங்கள் எடுக்கவும் ஸ்ருடியோ நித்ய சித்ரா, சங்கானை. (1506)

சங்கானை வெல்வில் முருகமூர்த்தி சிரணி நாகம்மாள் ஆலய தேர்த் திருவிழா வீடியோ காட்சிகளை 30ந் திகதி இன்று ஞாயிற்றுக்கிழமைவட்டுக் கோட்டை சிற்றிசன் ஒலிபரப்பில் கண்டு களிக்கலாம். சங்கானை ஸ்ருடியோ நித்யசித்ரா தாபனத்தார் ஒளிப்பதிவு செய்து அளிக்கிறார்கள் [1670]

## தேவை

இரண்டு அறை கொண்ட வீட்டின் ஒரு பகுதி, வர்த்தக நிறுவனமாக இயங்குவதற்கு, யாழ்நகரில், மெயின் வீதி, முதலாம், மூன்றாம், நான்காம் குறுக்குத் தெருக்கள், சப்பல் வீதி, ரெம்பிள் வீதி ஆகிய ஏதாவது ஒரு பகுதியில் தெருவை அண்மியதாக வாடகைக்குத் தேவை.

விளம்பர எண் - 63, மே/பா, உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1551)

## மியாமியில் வெற்றிடம்

தையற் கலையில் தனியிடம் பெற்றிருக்கும் மியாமி காமென்ஸ் ஸ்தாபனத்தாருக்குத் தையலில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. மியாமி காமன்ஸ், 40, ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம், (1566)

நல்லூரில் சகல வசதிகளுடனும் இரண்டு அல்லது மூன்று அறை வீடு ஒன்று வாங்குவதற்குத் தேவை. விளம்பர எண் 64, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (1574)

## சூலாயுதம் வேலாயுதமாக மாறியது!

அச்சுவேலி, ஆக. 30

வைரவரின் சூலாயுதம் ஷெல் தாக்குதலால் வேலாயுதமாக மாறியதை அடுத்துதோப்பு வைரவர் கோயிலில் முருகனுக்கும் பூசை வழிபாடு நடைபெறுகின்றது.

அச்சுவேலி தோப்பு வைரவர் கோயிலில் வைத்து வழிபட்டு வந்த ''சூலம்'' ஷெல் தாக்குதலால் வேல் ஆக மாறியுள்ளது.

சூலத்தின் இரண்டு பக்க துண்டுகளும் உடைந்து நடுத்துண்டு வேல்மட்டும் சேதமடையாமல் இருந்தது.

இதனை அவதானித்த பொதுமக்கள் வைரவர் ஆலயத்தில் வேலாயுதத்தையும் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகின்றனர். (ஒ-11)

# 'ஷப்ரு' புதிர்ப்போட்டி: வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஆக. 30

நல்லூர் மகோற்சவத்தைமுன்னிட்டு ஷப்ரு யுனிக்கோ பிறைன்ஸ் நிறுவனம் நடத்திய அறிவுப் புதிர்ப் போட்டியில் பல்லாயிரக் கணக்கானோர் பங்கு கொண்டனர்.

பெரும் எண்ணிக்கையானோர் சரியான விடைகளை எழுதியிருந்தனர். அவர்களுள் பரிசைப் பெறும் அதிர்ஷ்டசாலிகளை யாழ் மாநகரஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் சீட்டுக்குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தார்.

பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

★ முதலாவது பரிசு (டெலிவிஷன்பெட்டி):- எஸ். சுதாகர், 637/1 நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

★ இரண்டாவது பரிசு (சைக்கிள்):- செ. கந்தசாமி, வேலணை கிழக்கு, வேலணை.

★ மூன்றாம் பரிசு (மின் விசிறி):- ஏ. ஏ. நீக்சலஸ், 63மருதடிவீதி, நல்லூர்.

பத்து ஆறுதல்பரிசுகள் பெறுவோர் விபரம்:-

★ செல்வி ஸ்ரீஜனனி சிவபாலன், 15/4 முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

★ வி. முரளி, 52, குமாரசாமி ஒழுங்கை, கந்தர்மடம்.

★ ந. ஆத்துப்பா, 21/13 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

★ கோகிலா சோதிசிவம், மே/பா செ. வேலுப்பிள்ளை, மீசாலை தெற்கு. மீசாலை.

★ க. நாகராசா, செல்லவத்தை, கரவெட்டி வடக்கு.

★ பூலோகராஜா சந்திரகாந்தா, 136, தேவாலய வீதி, ஆடியபாத வீதி, யாழ்ப்பாணம்.

★ நாகேஸ் மனோன்மணி, நீர்செம்மணி ரோட், கோப்பாய்.

★ பிரதீபன் கிருபை, 450, பருத்தித்துறை வீதி,

[5 ஆம் பக்கம் பார்க்க]

# பிறந்ததின வாழ்த்து



இன்று சுன்னாகம் முத்துக் கிருஷ்ணர் வீதி தேவகுமாரன் சகிதேவி தம்பதியரின் தனயன் சாயிரூபனின் (சாயிராம்) இரண்டாவது பிறந்ததினம். இவர், சாயிபகவானின் திருவருளால் நற்பண்புகளுடன் கூடிய கல்வி, தனம், ஞானம் ஆகிய சிறப்பியல்புகள் பெற்றுப் பல்லாண்டு வாழ, அம்மா, பப்பா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, கனடா மாமாமார், கொழும்பு சின்னமாமி, சித்தப்பா மற்றும் மாமன்மார், மாமிமார், சித்தன்னைமார், உற்றார் உறவினரும், ''சாயிராம்! சாயிராம்!!'' எனச் செல்லமாக அழைக்கும் தாத்தாவும் வாழ்த்துகின்றனர்.

# ஆஸ்மா வைத்தியம்

டாக்டர் நாடு திரும்பிவிட்டார். 01-09-87 இலிருந்து புதிய நோயாளர்கள் பார்வையிடப்படுதல், பதிவு செய்தல் ஆரம்பிக்கப்படுகின்றது. 28-06-87 க்கு முன்பு பதிவு செய்து பிரச்சினைகளின் காரணமாக கடிதம் கிடைத்தும் வரமுடியாமல் போனவர்களும், இடம் கிடையாதவர்களும் நேரடியாகத் தொடர்பு கொண்டால் முதலிடம் கொடுக்கப்படும். பழைய நோயாளர்கள் எந்நாளும் பார்வையிடப்படுவர்.

**பார்வை நேரங்கள்:**

காலை 9 மணி முதல் 12 மணி வரை
மாலை 4 மணி முதல் 6 மணி வரை

டாக்டர் சுருஜ் சோமசுந்தரம் [ஆஸ்மா சிகிச்சை நிபுணர்] 337, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (கைலாய பிள்ளையார் கோவிலுக்கும் நாவலர் கலாசார மண்டபத்திற்கும் இடையில் )

# வீட்டு மின் இணைப்பு வேலைகள்

வீட்டு மின் இணைப்பு வேலைகள் யாவும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**முக்கிய குறிப்பு:**

சகல மின் இயல் உபகரணங்களும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

**North Ceylon Service Division**

**14. St Peters Lane, Jaffna.**

# யாழ். மாவட்ட செயலகம்

## யாழ்ப்பாணம்.

### அரசாங்க வைத்தியசாலைக் கட்டடங்கள் அமைத்தல் / திருத்தவேலைகள்

1957-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆந் திகதி காலை 10-00 மணிவரை கீழே குறிப்பிட்ட வேலைகளுக்கான சில்லைத்த கேள்விகள் ரூபா 75 000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

இவ்வேலைகளைச் செய்வதற்கு விரும்புவோர் 1987ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆந் திகதி நண்பகல் 12-00 மணிவரை யாழ் செயலக பொறியியல் கிளையில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 100/-, திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா 25/- ஒவ்வொரு வேலைக்கும் காசுக்கட்டளை மூலம் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை. இல. | நிலையத்தின் பெயர் | வேலையின் விபரம் |
|---|---|---|
| 51 | தாதிகள் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம். | (1) பலகைக் கேற்றுடன் கிழக்குப் பக்கத்தில் சுவர் அமைய, மாணவர்களின் 50 துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தும் கட்டிடம் அமைத்தல். (2) பாடசாலைத் தலைவர், எழுதுவினைஞர் ஆகியோரின் காரியாலயத்திற்கு வலை அடித்தல், நீர்போக்கி திருத்தவேலை. (3) பீலி (Gutters) அடித்தல். |
| 52 | மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை. | நிர்வாகக் கட்டிடத்தின் நீர் கொடுக்கின்ற, பகிர்ந்து கொடுக்கின்ற நீர்க் குழாய்கள் திருத்த வேலை / மாற்றுதல் அத்துடன் நீர்போக்கி திருத்த வேலைகளும் குழாய்கள் மாற்றுதல். |
| 53 | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. | 1. 2, 5, 9, 10ம் கட்டிடங்களுக்கு (Wards) கழிவுநீர் வழிதிருத்தவேலைகள். 2 3, 4, 6, 8ம் கட்டடங்களில் அத்துடன் மலசலகூட கதவுகள் மாற்றிப் போடுதல். 3. குசினி அடுப்புக்கு சீமெந்து போடுதல். 4. 1, 10ம் கட்டிடங்களின் நீர் தொட்டி திருத்த வேலைகள் / மாற்றுதல். அத்துடன் 10, 5, 8, 6, 9ம் கட்டிடங்கள், வெளிநோயாளர் பிரிவு கட்டிடங்கள் என்பவற்றின் கான் நீர் குழாய்கள் திருத்த வேலைகள். |
| 54 | சுற்றயல் பிரிவு, நயினாதீவு. | பிரேதசாலை கூரை திருத்தவேலை, வைத்தியசாலையில் கிணறு திருத்தவேலை, ஆண்கள், பெண்கள் கட்டிடம் அத்துடன் பிரசவக் கட்டிடம் - கழிவு நீர் வாய்க்கால் திருத்த வேலைகள். |
| 55 | ஆதார வைத்தியசாலை கோப்பாய். | கம்பிவேலி திருத்துதல், பிரசவக் கட்டிடத்தின் குத்துக்கலம் (Squatting pan) மாற்றுதல். மருத்துவர் (R M. P. S ) விடுதியில் நீர் தொட்டி Wash Basin) மாற்றுதல். |
| 56 | சுற்றயல் பிரிவு, காரைநகர். | பிரசவக் கட்டிடத்தில் யன்னல் திருத்த வேலை, மருத்துவ பெண் விடுதிகள் திருத்த வேலைகள். |
| 57 | சுற்றயல் பிரிவு, வல்வெட்டித்துறை | 1-ம் கட்டிடகூரை திருத்தவேலை, நோயாளரின் கட்டிடங்கள், மருத்துவரின் அலுவலக அறை, வெளி நோயாளர்கட்டிடம் என்பவற்றிற்கான நீர்குழாய் மாற்றி குழாய் அமைப்பது. |
| 57 | சுற்றயல் பிரிவு வல்வெட்டித்துறை | வெளிநோயாளர் கட்டிடத்திற்கும், 1ம் 2ம் கட்டிடத்தின் குத்துக்கலம் (Squ tting Pan) மாற்றுதல். |
| 58 | சுற்றயல் பிரிவு சங்கானை. | ஆண்கள் கட்டிடத்தின் கூரை திருத்தவேலை. |
| 59 | கிராமிய வைத்தியசாலை, வேலணை. | மருத்துவம் பெண்களின் வதிவிடம் திருத்த வேலை, பிரேதசாலை திருத்தவேலை. |
| 60 | கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு. | சேவையாளரின் மலசலகூட திருத்தவேலைகளும் கதவு மாற்றுதலும். |
| 61 | மத்திய மருந்தகம் பிரசவவிடுதி, அளவெட்டி | நீர்தொட்டிக்கு மூடி அமைத்தல், மருத்துவ பெண்களின் சிறுதொழில் சேவையாளரின் இணைவதிவிடம் திருத்தவேலை, முற்பக்க இரும்பு கேற்றுடன் சுவர் அமைத்தல். |
| 62 | மத்திய மருந்தகம், வரணி | மருந்தகம் விடுதிகளின் கதவு, யன்னல் திருத்த வேலைகளும் பூட்டு பிணைச்சல் மாற்றுதலும், நீர் அடைப்பு மலகூடம் புதுப்பித்தல். |
| 63 | மத்திய மருந்தகம், கொடிகாமம். | குசினி அத்துடன் குசினியின் முன்விறுந்தை மேற்கூரை (Ceiling) திருத்த வேலைகள், குசினிக்கும் அதன் போக்குவரத்து விறுந்தையின் ஓடுகள் மாற்றுதல், யன்னல் கதவுகளின் கண்ணாடி மாற்றுதல், கிணறு திருத்த வேலை. |
| 64 | மத்திய மருந்தகம் பிரசவ விடுதி கோண்டாவில் | பிரசவ அறையின் மருந்துக் களஞ்சியத்தின் மேல்கூரை Celliug போடுதல் கிளினிக் அறையின் கதவுகள் மாற்றதுல். |
| 65 | மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறை. | களஞ்சிய அறைச் சுவர் பூசுதல் (Plastering) 1இல் இருந்து 5ம் கட்டிடம் 7ம் கட்டிடம் என்பவற்றுக்கு நீர்த்தொட்டி அமைத்தல். 6ம் கட்டிடத்திற்கு 3 கதவுகள் போடுதல். 5ம், 7ம் கட்டிடத்திற்கு தளஓடு போடுதல். |

இவ்விளம்பரம் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் கச்சேரி, பொறியியற் கிளையில் அறிந்துகொள்ளலாம்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரசாங்க அதிபர் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு, பதிவுத் தபால்மூலம் மெழுகு சீல் வைக்கப்பட்ட கடித மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், ''அரசாங்க வைத்தியசாலை கட்டடங்கள் திருத்தவேலை, அமைத்தல்வேலை இல......'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகள் அலுவலகத்தில் குறிப்பிட்ட திகதி அதாவது 11-9-1987 இன் முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றது. தபால்மூலம் அனுப்பப்படாத கேள்விகள் யாழ் செயலக அலுவலக உதவியாளர்/நிர்வாக உத்தியோகத்தரின் அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக டெப்படலாம். தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர். அவருடைய கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டதென்ற அறிவித்தல் கிடைத்த ஒருவார காலத்திற்குள் கீழ்க் குறிப்பிட்ட வைப்புப் பணத்தைச் செலுத்துவதுடன் வேலைக்கான ஒப்புதல் பத்திரங்களில் கையெழுத்திட வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5 விதத்தை ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிப்பதற்கும் பிணைப்பணமாக என்னால் பெயர் குறிப்பிடப்படும் வங்கியில் அல்லது வங்கியாணை மூலம் செலுத்தல் வேண்டும். வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிக்கப்பட்ட பின் இவ்வைப்புப்பணம் திருப்பி அளிக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளுதல் அவற்றின் பகுதி எதையாவது நிராகரித்தல் அல்லது அவற்றை முற்றாக நிராகரித்தல் என்னும் உரிமைகளும் பிற தீர்மானங்களும் அனைத்தும் இறுதி முடிவெடுக்கும் அதிகாரமும் கேள்விச் சபைத் தலைவரையே சார்ந்ததாகும்.

வை.மு. பஞ்சலிங்கம்,
யாழ். மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபரும்,
யாழ் மாவட்டம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம், 27-8-1987

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னர் பிரேந்திராவின் ஆட்சி நீடிக்குமா?

## மக்கள் மத்தியில் அதிருப்தி வளர்கிறது

உலகில் உள்ள ஒரே ஒரு இந்துமத நாடு நேபாளம். பிரேந்திர மன்னரின் ஆட்சி அங்கு 15 ஆண்டு காலமாக நடைபெறுகின்றது.

நாடாளுமன்ற ஜனநாயகம் அங்கு இல்லை. பஞ்சாயத்து முறைதான் நிலவுகிறது.

மன்னர் ஆட்சிக்கு எதிராக மக்கள் அதிருப்தி வளர்ந்து வருகின்றது.

நேபாள ஆட்சி பற்றி ஒரு கண்ணேட்டம் இங்கு பிரசுரமாகின்றது.

1972இல் நேபாள மன்னர் மகேந்திரா மறைந்தார்.

புதிய வாரிசு ஜனநாயக நடைமுறைக்கு அனுதாபமாகவும் காலத்துக்கு ஏற்ற விதமாகவும் நடப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

1960 இல் மன்னர் மகேந்திரா அரசபீடச் சதி ஒன்றை நடத்திஞர்.

அதன்படி நாடளுமன்றம் ஒழிக்கப்பட்டது. அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட்டன. அரசுத் தலைவர்கள் சிறையிடப்பட்டனர்.

பஞ்சாயத்து முறையை அவர் அறிமுகப்படுத்திஞர். அது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

கிராம மட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரை பஞ்சாயத்துமுறை அமுலாக்கப்பட்டது.

தாராள சிந்தனைக் கொள்கை கொண்ட வாரிசான அரசர் பிரேந்திரா, தந்தையின் கடுமையான போக்கைத் தளர்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பதினைந்து ஆண்டுகளின் பின்னர் பிரேந்திர மன்னர் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது போல் சில்லறை நடவடிக்கைகளையே மேற்கொண்டார்.

இரண்டு தேசியத் தேர்தல்கள் நடைபெற்றன. பஞ்சாயத்து முறையே உறுதிப்படுத்தப்பட்டது. தணிக்கைச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. அதிருப்தியாளர்கள் துன்புறுத்தப்பட்டனர்; சிறை வைக்கப்பட்டனர்.

இமாலய அரசதானியின் பஞ்சாயத்து நிர்வாகத்தில் ஊழல், பக்கச்

### எஸ். ஜி.

சார்பு போன்ற செயல்கள் ஊடுருவின.

1950இல் இருந்து ராணு வம்சத்தைச் சேர்ந்தவர்களே பரம்பரை பரம்பரையாகப் பிரதமர் பதவியை வகித்துவந்தனர். அவர்களின் செல்வாக்கைக் குறைக்கவே பஞ்சாயத்து முறை பயன்படுத்தப்பட்டது!

வறுமையில் அவதிப்படும் நாட்டில் மேலும் சுமைகளைச் சேர்ப்பதாக பஞ்சாயத்துமுறை இருந்தது.

அரசுத் தொழிலில் ஈடுபடுபவர்கள், இறக்குமதி லைசென்ஸ் வைத்திருப்பவர்கள் மற்றும் சலுகைசளை அனுபவிக்கிறுர்கள்.

### சுழலும் உலகில்

அரசு நடைமுறையில் மாற்றம் செய்ய விரும்பவில்லை.

அரசுப் பணம் விரையம் செய்யப்படுகின்றது. பணவீக்கம் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

தென் ஆசியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே 60 சதவீதமான நேபாளிகள் வாழ்கின்றனர்.

அரசு ஒத்துழைப்புடன் நடைபெறும் தொழில்களில் 300 கோடி ரூபா முதலீடு செய்தால் 100 கோடி ரூபா 'காணுமற்' போய்விடுகின்றது.

பொருளாதாரத்தைச் சீர்படுத்த அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனல் நேபாளம் சிக்கலில் இருந்து மீளுமா? என்பது தெரியவில்லை.

ஆதாரம்: ஏசியாவீக்.

# தெரியப்படுத்துங்கள்!

''தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்'' (பிலி 4:6)

ஒரு தாய் தன் சிறிய மகனை இரவில் தனியாக வீட்டில் விட்டுவிட்டுத் தன் பணிக்காக செல்ல வேண்டியிருந்தது. ''மகனே, தனியாக இருப்பதைப்பற்றி பயப்படாதே, இயேசு உன்னேடிருக்கிறுர். ஏதாவது பயமென்ருல் உதவிக்குக் கர்த்தர் தேவதூதர்களை அனுப்புவார்'' என்று கூறிப் போய்விட்டாள்.

காலையில் தாய் வந்ததும் மகன் சொன்ஞன்: ''அம்மா, இரவில் என் கட்டிலின்கீழ் ஏதோ குடுகுடு என்ற சத்தம் கேட்டது. எழுந்து பார்த்தால், எலிகள் ஓடிக்கொண்டிருந்தன. இந்த எலிகளுக்காகப் போய், தேவதூதர்களை ஏன் கூப்பிடவேண்டும்.? பூனை போதுமே என்று நினைத்து பூனைக்காக ஜெபித்தேன். ஒரு சில நிமிடத்திற்குள், ''மியாவ்'' என்ற சத்தத்தோடு ஒரு பூனையைக் கர்த்தர் அனுப்பினர். எல்லா எலிகளும் ஓடிவிட்டன. நான் நிம்மதியாகத்

### ஞானக்கதிர்

தூங்கினேன் என்ருன்.

ஆம் எலியை விரட்ட பூனை போதும்!

எலியாவைப்போஷிக்க காகங்கள் போதுமானதாக இருந்தது. (1ராஜா 17:4-6) சர்ப்பத்தால் தீண்டப் பட்டவர்கள் குணமடைய ஒரு வெண்கல சர்ப்பம் போதுமானதாக இருந்தது. (எண் 21:9) நாகமானின் குஷ்டரோகத்தைப் போக்க யோர்தானின் தண்ணீர் போதுமானதாக இருந்தது. (11 ராஜா 5;14) எசேக்கியா ராஜாவின் வியாதியை குணமாக்க அத்திப்பழத்து அடை



போதுமானதாக இருந்தது. (ஏசா 38:21)

எல்லாவற்றிற்கும் மேலாகப் பரலோக பண்டகசாலைகளைத் திறந்து ஆசீர்வாதங்களை அளவில்லாமல் பெற்றுக் கொள்ள உன் ஜெபம் போதுமானது. உன் ஜெபம் உலகங்களை ஆளுகிறவருடைய சரங்களை அசைக்கிறது. உன் குடும்பத்தில் சமாதானம் ஏற்பட உன் ஜெபம் போதுமானது.

### துருப்புகள் பாசறைக்கு

வடபகுதியில் இருந்து வாபஸ் வாங்கப்பட்டு கொழும்புப்பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவச் சிப்பாய்கள்விரைவில் பாசறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். (உ-எ)

### பிறந்தநாள் பூசை நடக்கவில்லை

மூளாய் பிள்ளையார் கோவிலில், அரசியல் தலைவர் ஒருவரின் பிறந்த நாளை ஒட்டி ஏற்பாடாகி இருந்த விசேட பூசை நடக்கவில்லை.

பூசை நடைபெற இருந்த வேளை அங்கு வந்த கோஷ்டி ஒன்று பூசை தேவையில்லை என்று வாதிட்டுச் சச்சரவு செய்தது. பூசையை ஒழுங்கு செய்தவரும் தாக்கப்பட்டார். (அ-28)

### ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை!

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அரசுத் தபால் உறைகளில் இந்த எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

''தேசாபிமானிகள் இயக்கம்'' என்று கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. பொலீஸ் விசாரணை நடைபெறுகின்றது. (உ-எ)

# தமிழ்-முஸ்லிம் இடையே ஒற்றுமை ஓங்க வேண்டும்

## பிரசைகள் குழுத்தலைவர் சொல்கிருர்

அம்பாறை, ஆக. 30

''தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமை மேலோங்க வேண்டும். எம்மிடையே கசப்புணர்வுகளை வளர்த்துக்கொள்வதால் இரு சமூகங்களும் பாதிப்பையே அடைய நேரிடும்''

கல்முனைப் பிரதேச பிரஜைகள் குழு உபதலைவரும், கல்முனைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவருமான ஜனுப் எம். எம். இஸ்மாயில் மேற்கண்டவாறு கூறிஞர்.

கல்முனைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், கல்முனை மெதடிஸ்த மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறிஞர்.

கல்முனைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். ஐ. நித்தியராஜ் கூட்டத்தில் அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஜனுப். இஸ்மாயில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

நாம் எமக்கிடையே மனக் கசப்புகளின்றி வாழ்வதன் மூலமே நமது இரு சமூகங்களையும் காப்பாற்றலாம்.

எமக்கிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டால், அதனைப் பெரும்பான்மை சமூகம் எம்மை நசுக்குவதற்குச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தலாமென்பதை நாம் உணர வேண்டும்.

சுய அரசியல் இலாபங்களுக்காகவும், சொந்த நலன்களுக்காகவும் துவேசம் கொண்டு அரசியலில் வீருப்புப் பேசிய திரு. கே. எம். பி. ராஜரத்தின, திரு. சிறில் மத்தியூ போன்றவர்களுக்கெல்லாம் சரித்திரம் இருக்கவில்லை.

இவ்வாறு அவர் கூறிஞர். (ஓ-14)



### பொய்யாமொழி

**குறள்:**

ஓர்ந்துகண் ணேடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய் வஃதே முறை.

**பொருள்:**

யாரிடத்திலும் (குற்றம் இன்னதென்று) ஆராய்ந்து, கண்ணேட்டம் செய்யாமல், நடுவு நிலைமை பொருந்தி, (செய்யத் தக்கதை) ஆராய்ந்து செய்வதே நீதி முறையாகும்.


★ சர்வதேச தொலைபேசி
★ சர்வதேச ரெலக்ஸ்
★ உள்நாட்டு தொலைபேசி
★ உள்நாட்டு ரெலக்ஸ்

சேவை நேரம் காலை 6.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணி வரை. தொடர்ச்சியான சேவை.
இரவு நேர சேவைக்கு முன் கூட்டியே பதிவு செய்தால்
குறிப்பிட்ட நேரத்தில் சேவை செய்து தரப்படும்.
உங்களின் இல்லங்களிலோ வியாபார காரியாலயங்களிலோ
உங்கள் தொலைபேசியில் - வெளிநாடுகளில் உற்ருர்,
உறவினர், நண்பர்களுடன் செய்திகள்
பரிமாறுவதற்கு எங்களை நாடுங்கள்.

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
இல. 2, கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# காலபோக நெற் செய்கை

# கடந்தவருடம் வீழ்ச்சி

## பயிரழிவே காரணம்

மானிப்பாய், ஆக. 30 யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் மேற்கொண்ட புள்ளி விவர ஆய்வின்படி 1985 ஆம் ஆண்டைவிட 1986 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்ட காலபோக செய்கையின்போது செய்கை பண்ணப்பட்ட நெற்சாகுபடி 3.8 வீதத்தினால் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது.

1985 – 86 ஆம் ஆண்டு கால போகத்தின்போது யாழ். மாவட்டத்தில் மொத்தம் 26,861 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்கை பண்ணப்பட்டது.

சராசரியாக 34.7 புசல் நெல் இக்காலத்தில் பெறப்பட்டுள்ளது. மொத்தம் 641,000 புசல் நெல் உற்பத்தியாக்கப்பட்டது.

1986 – 87 ஆம் ஆண்டு கால போகத்தின்போது 26,086 ஏக்கர் நிலத்தில் நெல் விதைக்கப்பட்டு சராசரியாக 30 9 புசல் நெல் பெறப்பட்டது.

1985 ஆம் ஆண்டை விட 1986 ஆம் ஆண்டு நெற்செய்கை வீழ்ச்சியடைந்தமைக்கு பயிரழிவே முக்கிய காரணம் என யாழ்ப்பாணம் செயலக புள்ளிவிவர உத்தியோகத்தர் திரு. ரி. விஜயசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

1986 ஆம் ஆண்டில் 6,000 ஏக்கர் நெல்வயல்கள் பல்வேறு காரணங்களினால் அழிவுற்றதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-90)

கல்முனை

## மெதடிஸ்த திருச்சபை 30 வீடுகளைக் கட்டியது

கல்முனையில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற வன்செயலில் கல்முனை 2 ஆம், 3 ஆம் குறிச்சிகளில் வீடுகளை இழந்தவர்களுக்கு கல்முனை மெதடிஸ்த திருச்சபை 'லீட்ஸ்' நிர்வாகத்தின் உதவியுடன் 30 வீடுகள் கட்டிக் கொடுத்தது.

கல்முனை விவேகானந்த வித்தியாலயத்தில் வீடுகளுக்கான திறப்புகள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

இதில், அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன உதவிப் பணிப்பாளர் திரு எஸ். செந்தில்நாதன், கல்முனை உதவி அரச அதிபர் ஜனாப். முயினுடீன், கல்முனை புனர்வாழ்வுக்குழுத் தலைவர் திரு. கோபன் கந்தையா மெதடிஸ்தபோதகர் வண எஸ். கே. செபரட்ணம், வண. லோப்பு அடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி 30 வீடுகளுக்கும் 4 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. (ஒ-84)

ஈ. பி. ஆர். எல், எவ்வின்

## சொற்ப ஆயுதங்களே கையளிக்கப்பட்டன

மட்டக்களப்பு ஆக. 30 மட்டக்களப்பில் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் அண்மையில் ஆயுதங்களை வைபவரீதியாக மென்ரேஷாவில் வைத்து இந்திய அமைதி காக்கும் படையின் இணைப்பாளர் தளபதி தஹாவிடம் கையளித்தது.

திரு வரதராஜப்பெருமாள் வைபவரீதியாக ஏ கே. 40 ரகத் துப்பாக்கியை அவரிடம் கையளித்தார்.

மிக சொற்ப தொகையான ஆயுதங்கள்தான் அவர்களினால் கையளிக்கப்பட்டது.

இயக்கப் பேச்சாளர் திரு கேதீஸ்வரன் தகவல் தெரிவிக்கையில்,

எமது இயக்கத் தோழர்கள் வைபவரீதியாக இதுவரை ஆயுதங்கள் கையளிக்கவில்லை. இதுதான் முதலாவது நிகழ்ச்சியாகும்

தனிப்பட்ட ரீதியில் ஆயுதங்களைக் கையளித்துள்ளார்கள்-என்றார். (ஒ-21)

## வாசுதேவா அம்பாறை வருகை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு. வாசுதேவா தமிழகத்திலிருந்து அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்

திரு. வாசுதேவாவுடன் வந்த புளொட் இயக்கப் போராளிகள் கிராமம் கிராமமாகச் சென்று உள்ளூர்ப் பிரமுகர்களையும், ஆதரவாளர்களையும் சந்தித்து வருகின்றனர்.

## வேண்டா வெறுப்பாக வெள்ளைப் பச்சை அரிசி

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் இலங்கை அரசு நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் பாவனையாளர்கள் வெள்ளைப் பச்சை அரிசியை நிர்ப்பந்தத்தின் பெயரில் வாங்கிச் செல்கின்றனராம்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் புழுங்கல் அரிசி (நாட்டரிசி) சுறுத்தப் பச்சை அரிசி இல்லாமல் இருப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பச்சை அரிசியையே பெற்றுச் செல்கின்றனர்.

அச்சுவேலி, பத்தைமேனி கிராம சேவையாளர் பிரிவுகளில் குடியிருப்பவர்களுக்கு 275 ரூபா தொடக்கம் 1000 ரூபா வரை நிவாரண உதவியாக இலங்கை அரசாங்கம் வழங்கிய போதிலும் தமது விருப்பத்திற்குரிய புழுங்கல் அரிசியையோ சுறுத்தப்பச்சை அரிசியையோ பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது என பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கிறார்கள் (ஒ-11)

## நிவாரணம் வழங்க நடவடிக்கை

பருத்தித்துறை இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவும் புலோலி அரசினர் வைத்தியசாலை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் க. லலித்குமாரும் கெருடாவில் கிராமத்திற்குச் சென்று பாதிப்புக்குள்ளான பகுதிகளைப் பார்வையிட்டனர்.

கெருடாவில் கிராம அபிவிருத்திச்சபையினரின் அனுசரணையோடு அப்பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்க அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## மாவட்ட அமைச்சர்கள் வருவர்

மட்டக்களப்பு ஆக, 30 வடக்கு-கிழக்கு சிவில் நிர்வாக அலுவல்கள் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் மாவட்ட அமைச்சர்கள் தமது மாவட்டங்களுக்கு விஜயம் செய்து நிலவரத்தை நேரடியாக ஆராயுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (ஒ-21)

## தமிழ், முஸ்லிம் வேட்பாளரடங்கிய பட்டியலையே சிபார்சு செய்வேன்!

### மட்டுநகர் எம். பி. றிஸ்வி கூறுகிறார்

அம்பாறை,-ஆக. 30 மாகாணசபைத் தேர்தலுக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஐ தே. கட்சியின் சார்பில் வேட்பாளர் பட்டியல் ஒன்றை நான் சிபார்சு செய்வதனால், அப்பட்டியலில் தனி முஸ்லிம்களை மட்டும் சிபார்சு செய்யமாட்டேன் தமிழ் முஸ்லிம் வேட்பாளர்களை உட்படுத்தியதாகவே சிபார்சு செய்வேன்.

மட்டக்களப்பு இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப். அகமது றிஸ்வி சின்னலெவ்வை மேற்கண்டவாறு கூறினார்.

அகில இலங்கை முஸ்லிம்லீக் வாலிப முன்னணியின் கிழக்குப் பிராந்திய சம்மேளனத்தினால் அக்கரைப்பற்றில் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே இவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது.

''ஜனாதிபதியும் ஐ.தே கட்சியின் அரசும் வடக்குடன் இணையாது கிழக்கு பிரிய வேண்டும் என்பதற்கு முழு முயற்சியுடன் செயல்படவுள்ளனர் இதற்காக அவர்கள் முஸ்லிம்களின் ஆதரவைக் கோருவர்

அதேபோல் கிழக்கு மாகாணத்தை வடக்குடன் இணைத்து வைத்திருக்கவேண்டும் என்பதற்காக இணைப்பை உறுதிப்படுத்த தமிழ்க் குழுக்களும் முஸ்லிம்களை அணைத்துச்செயல்படுவர்.

எனவே தற்காலிக இணைப்பு இருக்கும் ஒரு வருடகாலத்துக்கும் முஸ்லிம்கள் எவ்வித அச்சமோ, சலனமோ கொள்ளத் தேவையில்லை. அதன் பின் நம் நிலைப்பாடு என்ன? என்பது பற்றிய சிந்தனையே எமக்கு வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (ஒ—14

மக்கள் முகம்

## லயன்ஸ கழக நிர்வாகிகள்

அச்சுவேலி, ஆக, 30 அச்சுவேலி லயன்ஸ் சழக புதுவருட நிர்வாகிகள்:

தலைவர் பேராசிரியர் என். பாலசிருஷ்ணன் (யாழ்பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி) செயலாளர் திரு. வி. சுவாமிநாதன். (மின்சார அத்தியட்சகர்) பொருளாளர் திரு, எஸ். சண்முகநாதன்.

அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரியப்பட்டனர். (ஒ - 11)

## ராஜீவைத் தாக்கியவரின் சேர்ட் வாசகங்கள்...

கொழும்பு, ஆக. 30

- 'கொலைகார அணி'
- 'நாம் தொழில் ரீதியானவர்கள்'
- 'நாம் பெருமைப் படுவோம்'
- 'நாம் முன்னேறுகின்றோம்'

பிரதமர் ராஜீவ் காந்தியை கடந்த 30 ஆம் திகதி கொழும்பில் வைத்துத் தாக்கிய கடற்படைச் சிப்பாய் விஜேமுனி விஜிதா ரோஹன அணிந்திருந்த வெள்ளை நிற ரீஷேர்ட்டில் முன் சண்ட வாசகங்கள் அச்சிடப்பட்டிருந்தன.

கடந்த புதன்கிழமை புறக்கோட்டைநீதிவான் முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர் செய்யப்பட்ட போது இச்சட்டையை அவர் அணிந்திருந்தார்.

மேலும் விசாரணைகள் நடத்தப்படவேண்டி இருப்பதால் சந்தேக நபரைத் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிடும்படி இரகசியப் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் யு. ஏ. குமாரசிங்க விண்ணப்பித்தார்.

விண்ணப்பத்தைப் பதில் நீதிவான் வால்டர் ஜெயவர்த்தன ஏற்றுக் கொண்டார். (உ-எ)

## ஜெர்மனியில் இளைஞன் மரணம்

கிளிநொச்சி ஆக. 30 கிளிநொச்சி வாசி மேற்கு ஜெர்மனியில் கார் விபத்து ஒன்றில் அகால மரணமானார்.

மேற்கு ஜெர்மனியில் நிகழ்ந்த கார் விபத்தில் அகால மரணமானவர் பூபாலசிங்கம் சிவபாலன் [23 வயது] என்பவராவர்.

கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவரான இவர் கிளிநொச்சி இரத்தினபுரம் விளையாட்டுக் சழகத்தின் உறுப்பினராகவும் கிளிநொச்சிக் கச்சேரி சிற்றூழியராகவும் இருந்தவர். (ஒ - 76)


# NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, JAFFNA. — 241, Navalar Road, JAFFNA.

88 A/L DAY CLASS

பிரிவு 1 ஆரம்பம்;- 01-09-1987 செவ்வாய் காலை 8 30 மணி

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

PHYSICS ★ திரு. சத்தியசீலன்
CHEMISTRY ★ திரு. மக்லி
BOTANY ★ திரு.செல்வநேசன்
ZOOLOGY ★ திரு. நாகநாதன்
PURE & APPLIED MATHS ★ திரு. A. பத்மநாதன்

| | | |
|---|---|---|
| 8-30 | 9-30 | PHYSICS |
| 9-30 | 10-30 | CHEMISTRY |
| 10-30 | 11-30 | Zoology |
| 11-30 | 12-30 | Botany |
| 10-30 | 11-30 | PURE & APPLIED MATHS |
| 11-30 | 12-30 | |

பிரிவு II ஆரம்பம்:- 19-09-87 காலை 8-30 மணி

88, 89 A/L Weekend Class நடைபெறுகின்றன.

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

Physics திரு. வர்ணம்
Chemistry திரு. தில்லைநாதன்
Botany திரு. குகாதரன்
Zoology திரு. நாகநாதன்
Pure & Applied Maths திரு. நல்லையா

**88 A/L**

| | | | |
|---|---|---|---|
| 7 30 | 8 30 | physics | வெப்பவியல் |
| 8 30 | 9 30 | Botany | நுண்ணங்கி உலகம் |
| 9 30 | 11 30 | Zoology | நரம்புத்தொகுதி |
| 11 30 | 12 30 | chemistry | சேதனஇரசாயனம் |
| 12 30 | 1 30 | physics | வெப்பவியல் |
| 1 30 | 2 30 | Botany | தாழ்வகை தாவரம் |
| 2 30 | 4 30 | Zoology | மூளையவியல் |
| 9 30 | 11 30 | Pure & applied Maths | |

**89 A/L**

| | | | |
|---|---|---|---|
| 7 30 | 9 30 | Zoology | தொகுதிகள் |
| 9 30 | 10 30 | Botany | |
| 10 30 | 11 30 | chemistry | பொது இர. |
| 11 30 | 12 30 | Physics | ஒளியியல் |
| 12 30 | 1 30 | Botany | உருவவியல் |
| 1 30 | 2 30 | Zoology | தொகுதிகள் |
| 1 00 | 3 00 | Pure & Applied Maths | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பாவஞ் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப் பிரமாணத்தை மீறுகின்றதே பாவம். —பைபிள்

உதயன்
உண்மை - சுதந்திரம் - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22078
30.8.1987 ச பெ.இல/-23

## சர்வஜன வாக்கெடுப்பும் கிழக்கு முஸ்லிம்களும்

வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ளப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவித்திருக்கிறது. இது நல்ல சகுனம்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் தமிழருக்கு வழங்கப்பட்டிருக்கும் ஒரே ஒரு சாதகமான அம்சம் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்து ஓர் ஆட்சிச் சபையை நிறுவுவது என்பது மட்டுமே.

தமிழ் மக்களின் அபிலாஷையில் அந்த ஒன்றுக்கு மட்டுமே ஒப்பந்தம் வகை செய்த போதிலும், அதனை நிரந்தரமாக வழங்குவதாக இல்லை. ஒரு வருட காலத்தில் கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி வடக்குடன் சேர்ந்து இயக்க விருப்பமா என அறியப்படும் என்று ஒப்பந்தம் கூறுகிறது.

கொடுப்பது போல் கொடுத்து எடுப்பது போல் எடுக்கும் தந்திரமும், சூழ்ச்சியும் நிறைந்த நடவடிக்கையே சர்வஜன வாக்கெடுப்பு.

இந்தச் சூழ்ச்சி நிறைவேறுமல் தடுப்பதற்கு கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைய வேண்டியது மிகவும் அவசியம்.

கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் இணைப்புக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள்; இருக்க வேண்டும் அதிலிருந்து அவர்கள் தவறினால், அவர்களுக்கு உயிர் உடைமைப் பாதுகாப்பு நிரந்தரமானதாக அமையமாட்டாதுஎன்பது முதலாவது அரசியலில் ஏனையவர்களுடன் சம அதிகாரம் கிடைக்காது என்பது இரண்டாவது காலப்போக்கில் தமிழர்கள் என்ற தனித்துவமும், கலாசாரத் தனித்துவமும் சூறையாடப்பட்டு, நிர்க்கதிக்கு ஆளாகும் நிலைமை உருவாகும் என்பது மூன்றாவது.

இந்த ஆபத்துக்களை உணராது கிழக்கு மக்களை வடக்கு மக்களிடமிருந்து பிரித்து வைக்க அரசாங்கம் முயற்சிக்கும் என்பது நிச்சயம். இப்போதிருந்தே தனது கைப்பொம்மைகளைக் கொண்டு, கையாட்களைக்கொண்டு, தற்காலிக சலுகைகளை மயக்க மருந்தாக்க் கொடுத்து கிழக்குத் தமிழர்களை இணைப்புக்கு எதிராக மாற்றுவதற்குத் திட்டங்கள் வைத்திருக்கலாம். யாழ்ப்பாணம் மட்டக்களப்பு என்ற பிரதேச வேற்றுமையை வளர்த்து அதன் மூலம் தமிழர்களைப் பிரித்து விட முனையலாம்.

இவை குறித்துக் கிழக்குத் தமிழர்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டும். கடந்த நான்கு வருடங்களாகத் தமது சொந்த மண்ணில் வாழ முடியாது அகதிகளாகக் குடிபெயர்ந்த அவலம் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும். தமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வையும் வளத்தையும் மனதிற் கொண்டு செயற்பட வேண்டும். இணைப்பை ஆதரிப்பது என்ற நிலையிலிருந்து எந்தக் கட்டத்திலும் மாறிவிடக் கூடாது.

வடக்கு-கிழக்கு இணைப்பை உறுதியாக்கிக் கொள்வதில், நிரந்தரமாக்கிக் கொள்வதில் முக்கிய பங்கு வகிக்க இருப்பவர்கள் கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம் மக்களே. சர்வஜன வாக்கெடுப்பின் முடிவை நிர்ணயிப்பவர்களாக — தீர்மானிப்பவர்களாக இருக்கப் போகின்றவர்களும் அவர்களே.

அந்த வகையில், கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களுக்கென முதலில் நிறுவப்பட்ட அரசியற் கட்சியாக விளங்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, இணைப்பை ஆதரிக்கப் போவதாக அறிவித்திருப்பது ஒரு நல்ல சகுனமே.

முஸ்லிம் காங்கிரஸ்கட்சி இணைப்பை ஆதரிப்பது என்ற நல்ல முடிவுக்கு வந்திருக்கிறது, திர ஆலோசித்து அந்த முடிவைச் செய்திருக்கிறது. அதனைப் பின்பற்றி கிழக்கில் உள்ள ஏனைய முஸ்லிம் இயக்கங்களும் இந்த முடிவையே அனுசரித்துச் செல்லும் என எதிர்பார்ப்போமாக.

இணைப்பை ஆதரிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ள நிபந்தனைகள் முற்றிலும் நியாயமானவை. முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம், பாதுகாப்பு என்பனவற்றுக்கு தமிழர்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனைகளாகும்.

முஸ்லிம் மக்கள் தமிழர்களை விட வேறு வகையான, தனித்துவமான சமூக, கலாசார பாரம்பரியங்களைக் கொண்டவர்கள். ஒரு சமூகம் என்ற வகையில் அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாத்து வளர்க்க தமிழ் மக்கள் முழுமனதோடு உதவ வேண்டும்.

அவர்களும், தங்களைப் போலவே ஒரு சிறுபான்மைச் சமூக மக்கள் என்பதைப் புரிந்து கொண்டு, அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அவர்களுக்குச் சகல உரிமைகளையும் வசதிகளையும் வழங்க வேண்டும்.

இரு சாராரின் தாய்மொழியும் தமிழே என்பதால் அவர்களோடு முழுக்க முழுக்க இணைந்து வாழும் எல்லாச் சாத்தியங்களும் உண்டு. ஆகவே அவர்களை எமது சகோதரர்களாக அணைத்துச் செயற்பட வேண்டும். இதில் தமிழர் மத்தியில் அல்லது தமிழ் அரசியல் கட்சிகள், விடுதலை அமைப்புகள் மத்தியில் எவ்வித கருத்து வேறுபாட்டுக்கும் இடமிருக்கலாகாது.

# பஞ்சாப் தீவிரவாதிகள் வசம் ஹெலிக்கொப்டர்?

## பொலீஸ் அதிபர் வெளியிட்ட திடுக்கிடும் தகவல்

அமிர்தஸாஸ், ஆக. 29 பஞ்சாப் தீவிரவாதிகளிடம் ஹெலிக்கொப்டர், 2 அங்குல மோட்டார் ஷெல்கள் மற்றும் பல நவீன ஆயுதங்கள் உள்ளன என்று நம்பப் படுகின்றது

அமிர்தசரஸ் மாவட்ட பொலீஸ் அதிபர் முகமட் இஸ்ஹார் ஆலம் இத்தகவலை வெளியிட்டார்.

சில தீவிரவாதிகளை விசாரணை செய்தபோதே இது பற்றிய தகவல்கள் வெளி வந்தன

முக்கிய பிரமுகர்களின் வீடுகளைத் தாக்கக்கூடிய ரொக்கட்டுக்களும் தீவிரவாதிகளிடம் உள்ளன என்பதும்தெரிய வந்தது.

—இப்படித் தெரிவித்த பொலீஸ் அதிபர் மேலதிக விவரங்களைத் தெரிவிக்க மறுத்து விட்டார். (உ-எ)

### கட்சி மாறினார்

சென்னை, ஆக 29 தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு கிள்ளிவளவன் அண்ணா தி மு.க. வில் சேர்ந்து கொண்டார்.

அண்ணா தி. மு. க. சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் எஸ் இராகவானந்தம் முன்னிலையில் திரு. கிள்ளிவளவன் தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.

தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

## கட்சிப் பதவியிலிருந்து சீனத் தலைவர் விலகுவார்

பீகிங், ஆக. 29 சீனத் தலைவர் டெங் ஷியாஓபிங் அக்டோபரில் பொலிற்பிரோ உறுப்பினர் பதவியில்இருந்து விலகுவார்.

இப்படி சீன உதவிப் பிரதமர் வான்லி தெரிவித்தார்.

சீனக் கம்யூனிஸ்ட் பொலிற்பிரோவில் உள்ள ஐந்து உறுப்பினர்களில் ஒருவர் டெங்.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் 13 ஆவது மாநாடு எதிர் வரும் அக்டோபர் 25 இல் ஆரம்பமாகிறது. (உ-எ)

## வெளி உலகில்

## காமன்வெல்த்தில் மீண்டும் பாகிஸ்தான்?

### ரம்பால் முயற்சி

லண்டன், ஆக. 29 காமன்வெல்த் நாடுகள் அமைப்பில் பாகிஸ்தான் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

அமைப்பின் செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரம்பால் ஏனைய உறுப்பு நாடுகளுக்கு இது பற்றி மறைமுகமாகத் தகவல் தெரிவித்திருக்கின்றார்.

பாகிஸ்தானை மீண்டும் அமைப்பில் சேர்த்துக் கொள்வதை ஏனைய நாடுகள் எதிர்க்காமல் இருப்பதை உறுதி செய்வதில் செயலாளர்நாயகம் ஈடுபட்டிருக்கின்றார் என்று லண்டன் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் எதிர்ப்பைச் சமாளிப்பதுதான் பிரச்சினையாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பாகிஸ்தானில் சிவில் ஆட்சி ஏற்படும் வரை காமன்வெல்த்தில் அது சேர்க்கப்படுவதை எதிர்க்கப்போவதாக இந்தியா கூறியிருக்கின்றது

''காமன் வெல்த் அமைப்பில் மீண்டும் சேர்ந்து கொள்ளவே பாகிஸ்தான் விரும்புகின்றது. ஏனைய நாடுகளின் விருப்பத்தை அறிந்த பின்னரே பாகிஸ்தான் விண்ணப்பிக்கும்''— இப்படி லண்டனில் உள்ள பாகிஸ்தான் தூதர் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் பிரிக்கப்பட்டதையடுத்து அந்நாட்டைப் பிரிட்டனும் ஏனைய காமன்வெல்த் நாடுகளும் அங்கீகரித்தன. இதைத் தொடர்ந்தே பாகிஸ்தான் காமன்வெல்த்தில் இருந்து வெளியேறியது. (உ-எ)

அணுசக்தித் தொழில்நுட்பம்

## இணக்கத்துக்கு வர பாக். தயாரில்லை

இஸ்லாமாபாத், ஆக. 29 அணுசக்தித் தொழில் நுட்ப் பிரச்சினை குறித்து எந்த நாட்டுடனும் இணக்கத்துக்கு வர பாகிஸ்தான் தயாராக இல்லை.

பிரதமர் முகமட் கான் ஜுனஜோ முன்கண்டவாறு தெரிவித்தார்.

கராச்சியில் முஸ்லிம் லீக் கிளை அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டு பிரதமர் பேசினார்.

அணுசக்தி தொழில் நுட்பத்தில் பாகிஸ்தான் வளர்ச்சி பெற வேண்டியது அவசியமாகும்.

பாகிஸ்தானின் சுபீட்சத்துக்கு இது அத்தியாவசியமாகும்.

—இப்படிப் பிரதமர் சொன்னார். [உ-எ]

## விமான விபத்தில் நால்வர் மரணம்

பாரீஸ், ஆக.29 சூரிய உதயத்தைப் படம் பிடிக்கச்சென்ற நான்கு பேர் உயிரிழந்தனர்.

இவர்கள் பாரமில்லாத விமானம் ஒன்றில் பிரான்ஸில் மொன்ட் பிளாங் என்னுமிடத்தில் சூரிய உதயத்தைப் படம் பிடிக்கச்சென்றனர்.

வழியில் அவர்கள் பயணம்செய்த விமானம் அல்பின் நாட் அருகில் விழுந்து நொருங்கியது. நால்வரும் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

மூவர் செல்லக்கூடிய இவ்விமானத்தில் நால்வர் பயணம் செய்ததே விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. [உ-எ]

தி. மு. கவைச் சேர்ந்த

## மாநகர முதல்வர்கள் உண்ணாவிரத முஸ்தீபு!

சென்னை, ஆக 29 சென்னை கவானர் மாளிகை 'ராஜ்பவன்' முன்னால் அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் ஒருநாள் உண்ணாவிரதம் இருக்க தி.மு க. மாநகர சபைத் தலைவர்கள் சமாசத்தின் பொதுச்சபை தீர்மானித்து உள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரிய அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்க தமிழ்நாடு அரசு தவறியதைக் கண்டிக்கு முகமாக இந்த உண்ணாவிரதம் நடத்தப்படும் என்று பொதுச்சபை மேலும் தெரிவித்தது [உ-எ]

## திருக்கழுக்குன்றத்தில் தேர்கள் தீக்கிரை!

செங்கல்பட்டு, ஆக 29 திருக்கழுக்குன்றம் ஸ்ரீ வேதகாரீஸ்வரர் ஆலயத்துக்குச் சொந்தமான இரண்டு தேர்கள் தீக்கிரையாகின.

தீயை அணைக்க செங்கல்பட்டில் இருந்து சென்ற தீயணைப்புப் படை இயந்திரம் ஆலயத்துக்கு அருகில் புதையுண்டதால் தீயை அணைக்கமுடியவில்லை.

பின்னர் தாம்பரம், ஸ்ரீ பெரும்புதூர், கல்பாக்கம் ஆகிய இடங்களில் இருந்து சென்ற தீயணைப்புப் படைகள் தீயை அணைத்தன.

ஆனல் தேர்கள் திருத்த முடியாத அளவுக்கு சேதமடைந்து விட்டன.

தீயணைப்புப்படை தாமதமாக வந்ததால் அப்பகுதி மக்கள் ஆத்திரமடைந்து படையினரைத் தாக்கினர்.

எரிந்த தேரில் ஒன்று 50 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது [உ-எ]

### ஐ. நா.செயலருக்கு விளக்கம்

வாஷிங்டன், ஆக 30 இந்திய - இலங்கை ஒப்பந்தம் அமுல்செய்யப்படுவதில் உள்ள முன்னேற்றம்பற்றி ஐ.நா.பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர் சிங் இவ்விவரங்களை அவரைச் சந்தித்து எடுத்துரைத்தார். (உ-எ)

யாழ் மாவட்டத்துக்கு

## இடமாற்றம் பெற்ற அதிபர்கள்

பலாலி, ஆக. 30 வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு மாற்றலாகி வந்துள்ள இரண்டாம், மூன்றும் தர அதிபர்களது விவரங்கள் பின் வருமாறு:-

இந்த இடமாற்றம் செவ்வாய்க்கிழமை முதல் செயற்பாட்டிற்கு வருவதாக அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

திரு. கே. சற்குணசிங்கம் வவுனியா புதுக்குளம் ம. வி , யாழ். சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாசாலைக்கு.

கே. தங்கராசா, வவுனியா கோயில் புதுக்குளம் அ. த. க. பா. யாழ் சன்மார்க்க ம. வி. க்கு (7-10-87 இல் இருந்து கொக்குவில் ஞானபண்டித வித்தியா சாலைக்கு).

ரி. நல்லையா வலவள் முத்துவான் அ. த. க. பா. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலைக்கு.

எஸ். செல்வராசா கதாவியாசம்பாளன்குளம் த. க. பா. உடுவில் பரிசுத்த செபமாலை த. க. பாடசாலைக்கு.

கே. இளையதம்பி லேச்சன்குளம் இல, 1 அ. க. க பா யாழ். கைதடி நுணவில் அ. த. க பாடசாலைக்கு.

எஸ். துரைசிங்கம் குளவிசுட்டான் அ. த க. பா. யாழ். சுதுமலை வடக்கு அ. த. க. பாடசாலைக்கு.

எஸ். வேதாரணியம் பம்பைமடு அ. த. க. பா. யாழ். வரணி ம. வி. க்கு.

கே. கோபாலன் சின்னப்பூவரசன்குளம் அ த.க.பா. யாழ். நவாலி தெற்கு அ. மி த. க. பாடசாலைக்கு.

ரி செல்வராசா துணுக்காய் அ. த. க. பா. யாழ். நுணவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலைக்கு. (சிரேஷ்ட உதவி ஆசிரியர்)

ரி. சின்னத்துரை சுதந்திரபுரம் அ. த. க பா. யாழ். சாவகச்சேரி றே. க. பாடசாலைக்கு.

இ. ... ரி. இரா...

## சமய சந்நிதிகளில்

### பாலஸ் தாபன அபிஷேகம்

யாழ்ப்பாணம் ஆக 30, தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய பாலஸ்தாபன அபிஷேகம் இன்று காலை 9. 30 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து பகல் 11 மணியளவில் 'அன்னையின் இன்னருள்' என்னும் பொருளில் புஷ்பா செல்வநாயகம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (உ)

### மகா ஞான ஒடுக்கம்

இளவாலை, ஆக 30 இளவாலை புனித அன்னம்மாள் ஆலய பங்கு மக்களுக்கு அவ்வாலய வருடாந்த மகா உற்சவத்துக்கு முன்னோடியாக 15 நாள் மகாஞான ஒடுக்கம் நடைபெறுகிறது.

அருள்திரு ஜீவா போல் அருள்திரு வ. நீக்கலஸ் குரவர்கள் ஞான போதகம் செய்ய பங்குக்குரு அருள்திரு மைக்கல் பற்றிக் வழிநடத்துகிறார். (இ-48)

### சமாதான அறிவுரை

மட்டக்களப்பு, ஆக. 30 சிவில் நிர்வாகத்தில் ஏதாவது பிரச்சினை இருந்தால் பொலீஸ் நிலையம் சென்று புகார் செய்யுங்கள். இலங்கை- இந்திய ஒப்பந்த மீறப் பட்டால் எம்மிடம் வாருங்கள்.

மேற்கண்டவாறு இந்திய சமாதானப்படை அதிகாரிகள் மட்டக்களப்பு தமிழ் - முஸ்லிம் வர்த்தகர்களை அழைத்து பிரதி பொலீஸ் மா அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் தெரிவித்தனர்.

## வடபகுதி இளைஞருக்கு பிரிட்டிஷ் அரசு உதவும்

### தூதுவர் தகவல்

யாழ்ப்பாணம், ஆக 30 வேலையற்றிருக்கும் வடபகுதி இளைஞர்களுக்காக புதிதாக ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை உருவாக்கி, அங்கு அவர்களுக்கு தொழில் நுட்பக் கல்வியை வழங்க பிரிட்டிஷ் அரசுமுன் வந்திருக்கிறது.

இதன் மூலம் வடபகுதி இளைஞர்கள் பல துறைகளிலும் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்

வெள்ளியன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் திரு கிலாஸ்டரின் இதனைத் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் தூதுவருடன் ஐ. நா. சபையின் அபிவிருத்தித் திட்ட பிரதிநிதி தார்ப்பரும் வந்திருந்தார்.

யாழ்நகரில் பாதிப்படைந்த இடங்களை யாழ் செயலக உயரதிகாரிகளான திரு. கே. சோபாலரட்ணமும் திரு. எஸ். சிவதாசனும் இருவரையும் அழைத்துச் சென்று காண்பித்தனர்

புதிய தொழில் நுட்ப கல்லூரி அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வெகு விரைவில் பிரிட்டிஷ் அதிகாரிகள் குழு ஒன்று யாழ் வர உள்ளதாக பிரிட்டிஷ் தூதுவர் தெரிவித்தார். (ஓ)

### ஷப்ரு---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர்.

★ தி.குலராஜன் 39, மாவடி வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

★ பி அமலன், .171/பி மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

அறிவுப் புதிர்ப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசுகள்வழங்கப்படும் திகதி விரைவில் அறிவிக்கப்படும். (உ)

சையா வண்ணான்சின்னக்குளம் அ. த. க. பா. யாழ். சுன்னாகம் றே. க பாடசாலைக்கு

ஜி. ஏ. அந்தோனி மருதானை மெ. மி. த. க. பா. யாழ். அரியாலை ... பாடசாலைக்கு. (உ-119)

## வெளிநாட்டு சக்திகளுக்கு எதிராக இணைந்து போராட வேண்டும்

### நவசமசமாஜப் பிரமுகர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஆக. 30 வடபகுதியில் உள்ள போராளிகளும் தெற்கில் உள்ள முற்போக்கு சக்திகளும் இலங்கையில் உள்ள வெளிநாட்டு சக்திகளுக்கு எதிராக இணைந்து போராடவேண்டும்.

தொழிலாளர்கள் ஒன்றுபட்டு இணைந்து போராட ஒரு தொழிலாளர் அரசை அமைப்பதன் மூலம் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வு ஒன்றைக் காண முடியும்—இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் விக்கிரமபாகு கருணரட்ண தெரிவித்தார்.

வெள்ளிமாலை நவசமசமாஜக் கட்சியினால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் விக்கிரமபாகு கருணரட்ண. மற்றும் கட்சி முக்கியஸ்தர்களான அண்ணாமலை, திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. விக்கிரமபாகு கருணரட்ண மேலும் கூறியதாவது:-

தமிழரின் சுயநிர்ணய உரிமையைஅங்கீகரிக்கும் சமத்துவமான, சுயாட்சியுடைய, பிரிந்து போகக்கூடிய ஒரு அமைப்புதான் தமிழர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

இதனையே எமதுகட்சி அன்றும் இன்றும் வலியுறுத்தி வருகிறது.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களை நிராயுதபாணி ஆக்குவதனை எதிர்க்கிறோம்.

ஒப்பந்தம்மூலம் இடைக்கால தீர்வினல் ஏற்படும் அமைப்பில் தமிழ் மக்களுக்கு போதிய அளவு பிரதிநிதித்துவம் கிடைத்து தனிப் பொலீஸ் படை அமைக்கவும் அதிகாரம் கிடைக்குமானல் அவற்றுல் ஏதாவது செய்யக்கூடியதாக இருக்கும்.

ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததும் மொசாட் போன்ற வெளிநாட்டு சக்திகள் உடனடியாகவே நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற சரத்துஇருப்பினும் அவை இன்னும் வெளியேறவில்லை.

ஜே ஆர். மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியின் பின் விசாரணை நடத்த இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் வரவில்லை. பிரித்தானியாவில் இருந்துதான் நிபுணர்கள் வந்துள்ளார்கள்.

இது ஜே. ஆர். அரசு இன்னும் முதலாளித்துவ சக்திகளுடன் கொண்டுள்ள தொடர்பையே காட்டுகிறது—என்றார். (உ)

### ஒரே தடவையில் ஐந்துவார நிவாரணம்

அச்சுவேலி, ஆக. 30 இராணுவ நடவடிக்கையினல் பாதிக்கப்பட்ட அச்சுவேலி, பத்தமேனி கிராமசேவையாளர் பிரிவில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு ஒரு தடவையில் ஐந்து வாரத்திற்கான இலங்கை அரசின் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு குடும்ப அங்கத்தவர் தொகைக்கு ஏற்ப 275 ரூபாவிலிருந்து 100 ரூபாவரை பொருள்கள் பெறுவதற்கான "பெர்மிட்" வழங்கப் பட்டுள்ளது [ஓ-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பல வண்ணச் சேலைகள்
* அழகான பிளவுஸ் பீஸ்கள்
* சேட்டிங் சூட்டிங் புடைவைகள்
மற்றும்
* சகல றெடிமேட் ஆடைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

**மயூரா சென்ரர்**

70, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.



# உதயன்

30 - 08 1987 ஞாயிற்றுக்கிழமை



* பல வண்ணச் சேலைகள்
* அழகான பிளவுஸ் பீஸ்கள்
* சேட்டிங் சூட்டிங் புடைவைகள்
மற்றும்
* சகல றெடிமேட் ஆடைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

**மயூரா சென்ரர்**

70, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.



இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை
காங்கேசன்துறை

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து சீமெந்துப் பொதிகள் (Railway Waggon) ஏற்றி யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலுள்ள புகையிரதப் பெட்டியில் ஏற்றுவதற்கான

## கேள்விப் பத்திரம்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து சீமெந்துப் பொதிகளை, லொறிகள் மூலம் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு கொண்டு சென்று புகையிரதப் பெட்டிகளில் ஏற்றுவதற்கு கேள்விப்பத்திரங்கள் லொறிச் சொந்தக்காரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரையும் மீளப்பெற முடியாத வைப்புப்பணமாக ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 1987-09-03ம் திகதி மாலை 4-00 மணிவரை நிதி விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1987-09-04ம் திகதி காலை 10-30 மணிக்கு கேள்விப்பத்திரகாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

1987-08-29



## பிரயாண ஒழுங்குகள்

## ★ குவைத் ★
## ★ KUWAIT ★

★ இதுவரைகாலமும் எதிர்பார்த்திருந்த 'BES' KUWAIT பிரயாண ஒழுங்கு தயார் நிலையில் இருப்பதால் இது சம்பந்தமாக PASSPORT தந்து PRE SELECTION செய்யப்பட்டதவர்களும் PASS PORT தந்துள்ளவர்களும் உடனடியாக சந்திக்கவும்

★ மேலும் இதற்கு LABOURERS தேவையாக இருப்பதால் விருப்பமுள்ளவர்கள் உடனே தொடர்புகொள்ளவும்.

★ வயதெல்லை 20 - 42
★ கால எல்லை 4 வருடங்கள்
★ உணவு இருப்பிடவசதி இலவசம்
★ சம்பளம் 40KD (1 KD — 106 SR
★ நேர்முகப் பரீட்சை முடிந்ததும் 10 நாட்களில் பிரயாணம்

HEAD OFFICE :

**Construction & Development Company Ltd.**

37, S. DE S. Jeyasinghe Mawatha,
NUGEGODA.
Licence No. 96

தொடர்பு :

**V. P பாலசுப்பிரமணியம்**

V. P பாலா
c/o N. V. பொன்னுத்துரை
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.


# யாழ் வர்த்தகரின் மேலதிக தேவைகளையும் வர்த்தக வங்கி நிறைவேற்றும்

## நிர்வாக இயக்குநர் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 30

சஷ்டமான காலங்களிலும் வர்த்தக வங்கி, யாழ்ப்பாண மக்களுக்கு உரிய சேவை செய்தது. அதற்கான முழுப் பாராட்டுதல்களும், பெருமையும் கிளையின் முகாமையாளர் திரு. ராகவனையே சாரும்.

நிலைமை இப்போது சீராகி விட்டது. எமது வங்கி யாழ் மாவட்ட வர்த்தக, கைத்தொழில் அதிபர்களின் இப்போதைய மேலதிக தேவைகளையும் தயக்கமின்றி நிறைவேற்றும்.

இவ்வாறு வர்த்தக வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு. எட்ஹார் குணதுங்கா தெரிவித்தார்.

ஞானம்ஸ் ஹோட்டலில் வார மத்தியில் நடைபெற்ற வங்கியாளர், வர்த்தகர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் திரு. குணதுங்கா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது'-

வங்கிகளுக்கு சமூகப் பொறுப்புகளும் கடமைகளும் நிறைய உண்டு. வர்த்தக வங்கி அவற்றை உரிய முறையில் நிறைவேற்றி வருகிறது.

யாழ்ப்பாணத்திலும் எமது வங்கி தனது பொறுப்புகளை, உரிய முறையில் அர்ப்பணித்துச் செய்து வந்தது கஷ்டமான கடந்த நான்கு வருடங்களிலும் அவ்வாறே தொடர்ந்து, இனியும் தொடரும்.

நான்கு வருடங்களின் பின்னர் மீண்டும் பழமை நிலை ஏற்பட்டிருக்கிறது. இரு இனங்களிடையே உள்ள கசப்புணர்வை நீக்கி, புரிந்துணர்வையும், நட்பையும் மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

—இவ்வாறு சொன்னார்.

சந்திப்பில் கலந்து கொண்ட வர்த்தகர்கள் பலரும், பேசுகையில்—

அரச வங்கிகளான மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் யாழ்ப்பாணமக்களுக்கு சேவையாற்றப் பின் நின்ற கஷ்டமான காலங்களில் வர்த்தக வங்கி தொடர்ந்து பணியாற்றியதற்கு நன்றி தெரிவித்துப் பேசினார்கள். கஷ்டத்தின் மத்தியிலும் உழைத்த கிளை முகாமையாளர் திரு. ராகவனை எல்லோரும் பாராட்டினார்கள். (அ)

### ஊர்காவல்--

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

த்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தீவிரவாதிகள் ஒப்படைத்த ஆயுதங்கள் குறைவாக உள்ளன—

இந்திய அமைதிப் படையினருக்கு உதவும்படி இலங்கைப் பொலீஸார் பணிக்கப்பட்டுள்ளனர்—

இந்திய–இலங்கை ஒப்பந்தம்அமுல்செய்யப்படுவதில் தாமதம் எதுவும் இல்லை —என்றும் அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்தார். (அ-எ)

## பட்டமேறிய பாதுகை

யாழ்ப்பாணம், ஆக. 30

ஊரெழு ஸ்ரீ மீனாட்சியம்பாள் கோயில் மகோற்சவ இலக்கியவிழாவின் 5ம்நாளானஇன்று ''பட்டமேறிய பாதுகை'' என்ற தலைப்பில் திரு.இ. ஜெயராஜ் சொற்பொழிவாற்றுவார்.

திரு. மு. வேலாயுதம் நிகழ்ச்சிக்கு தலைமை வகிப்பார். (ஒ)

## ஐ-நா-செயலர் இலங்கை வருவார்

வாஷிங்டன், ஆக. 30

ஐ. நா. பொதுச் செயலாளர்பெரெஸ்டிகுயிலர் அடுத்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்வார்.

இத்தகவலை அவரே நேற்று இலங்கை வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுவிடம் தெரிவித்தார். (உ-எ)


யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்-இலங்கை

ஆங்கில நெறிக்கான தராதரப் பத்திரப் பரீட்சை- 1986
(Certificate Course in English Examination - 1986)
(பொதுக் கலைமாணி சிறப்புக் கலைமாணி வர்த்தகமாணி நிர்வாகமாணி -பகுதி 11)

மேற்கூறப்பட்ட பரீட்சை 1987 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் காலை 9.00 - மணிமுதல் 12.00 மணிவரை இராமனுதன் மண்டபத்தில் நடைபெறும். முன்னே வழங்கப்பட்ட பிரவேச அட்டையுடன் சமுகமளிக்கவும்.

- பதிவாளர்.



BUILDING TECHNOLOGICAL INSTITUTE

கட்டடத் தொழில் நுட்பவியல் நிறுவனம்
(கட்டடக் கலைஞர்களாலும் பொறியியலாளர்களாலும் பாராட்டப்பெற்ற நிறுவனம்)
136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

1. Diploma in Draughtsmanship
2. Diploma in Quantity Surveying
(City & Guilds London Exam. June 1988)

ஆரம்பம்:- 03-09-87 காலை 9-00 மணி

குறிப்பு;- எமது நிறுவனத்தில் பயிற்சி பெற்ற மாணவிகள் தற்போது வேலையற்று இருந்தால் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.


### கொழும்பு--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருப்போர் விவரம் வருமாறு:-

கே. வேலாயுதம்பிள்ளை [வயது 70]-புங்குடுதீவு, எஸ். சிறீதரன் வயது 26]-அளவெட்டி, ரி அன்னம்மா [வயது 55] வேலணை, சிவஞானம்-இணுவில், சண்முகலிங்கம்-மீசாலை. [ஓ]

### 2 ஆயிரம்--

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

முன்னர் 500 பஸ்கள் இலங்கைக்குத் தேவைப்படுகின்றன. இது பற்றி இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தி உள்ளேன்.

உடனடியாக 125 பஸ்களும், 65 ஆயிரம் சிலீப்பர் கட்டைகளும் தேவைப்படுகின்றன.

—இப்படி அமைச்சர் முகமது தெரிவித்தார், (உ-எ)

### ஈழவர் முன்னணி.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களை கண்காணித்து வர வேண்டும்.

—இவ்வாறு அந்த மகஜரில் கேட்கப்பட்டிருந்தது.

பேரணியின் இறுதியில் திரு. செல்வநாயகம் தலைமையில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இதில் பல பிரமுகர்களும் உரையாற்றினர். (உ-7)

### தோப்பூர்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர் நகர்ப் பகுதிக்குள் செல்ல முயன்ற போது அப்பகுதியில் ஷொட் கன்னுடன் நின்ற ஊர்காவலர் அதனைத் தடுத்து விட்டனராம்.

மட்டக்களப்பிலும் இதே போன்ற பேரணி ஒன்று புறப்பட்டது.

அக்கரைப்பற்றில் ஈழவர் முன்னணி ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. (உ)

### கல்வி ----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தார்.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் என்பனவும் அமைச்சரை வடபகுதிக்கு நேரில் விஜயம் செய்யுமாறு வேண்டியிருந்தன.

அதிகாரிகளையும் சம்பந்தப் பட்ட அதிபர்களையும் நாளை பிற்பகல் மூன்று மணியளவில் பலாலியில் கல்வி அமைச்சர் சந்திப்பார்.

சந்திப்பின் பின்னர் தேவையாயின், அமைச்சர் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் பார்வையிடச் செல்லக் கூடுமெனவும் தெரியவந்துள்ளது.

பாதிப்படைந்த பாடசாலைகளான உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ஆண்கள் பாடசாலை, உடுப்பிட்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் அதிபர்களையும் வடமாராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரி செல்வி பெரியதம்பி அவர்களையும் அமைச்சருடனான இச் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் [illegible] அழைத்துள்ளார். (உ-119)


# HORIZON ENTERPRISES

# A. பத்மதாஸ்

## பிரயாண ஒழுங்குகள்

எமது கிளைக் காரியாலயம் புளியங்கூடல் சந்தியில் அண்மையில் திறக்கப்பட இருந்ததும், நாட்டின் சூழ்நிலைகாரணமாக பிற்போடப் பட்டிருந்ததும் அனைவரும் அறிந்ததே இக் கிளைக்காரியாலயம் 30 - 8 - 87 ஞாயிறு காலை 9 மணியளவில் திறக்கப் பட இருப்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம் இக் காரியாலயம் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும் எல்லா நாட்களிலும் திறந்திருக்கும். நாம்மேற் கொள்ளும் அனைத்து நாடுகளுக்குமான வேலை வாய்ப்புகளும் உதவிமுகவர் நிலையமின்றி நேரிலேயே அனுப்பும் [Main] தலைமை முகவர்நிலையம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

மற்றும் எதிர்வரும் 15. 09. 87 திகதிக்கு முன்னர் அபுதாபி நாட்டிற்கும் மாலைதீவிற்குமான பின்வரும் வெற்றிடங்கள் உண்டு. இவற்றிற்கான வேலைவாய்ப்புடன் செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

HORIZON Enterprises

## ★ அபுதாபி ★
## ABUDHABI
## ★ அபுதாபி ★

1 ஆஸ்பத்திரி துப்புரவாளர்
Hospital Cleaners

## மாலைதீவு MALDIVES மாலைதீவு

1. குளிரூட்டல் மெக்கானிக் இயக்குவதில் அனுபவம் தேவை
Refrigeration Mechanic
Experience in Operating
7 5 K. W. Compressors
25 Vessels
Long Periods at Sea.

★ உணவு, இருப்பிடவசதி இலவசம். பாஸ்போட், 16 புகைப்படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். முற்பணம் அறவிடப்பட மாட்டாது.

### சாரதி அனுமதிப் பத்திரம்

வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கும், வாகனம் செலுத்தத் தெரியாதவர்களுக்கும் வாகனம் செலுத்தப் பழக்கியும் 3 நாட்களில் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். எமது முகவர் நிலையத்தினால் வெளிநாடு செல்பவர்களுக்கு மட்டுமே இச் சலுகை வழங்கப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டுமே வேலை வாய்ப்புடன் பிரயாண ஒழுங்குகள் செய்யும் பிரதான முகவர் நிலையம்.

பிரதி வாரமும் பிரயாணம் செய்தவர்களின் பெயர் விவரங்களை வெளியிடும் ஒரேயொரு பிரயாண முகவர் நிலையம்.

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை எமது அலுவலகம் திறந்திருக்கும். கடித மூலம் விபரம் பெற விரும்புவோர், சுய விலாசம் இட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ளவும்.

★ தலைமைக் காரியாலயம்:-
**A. பத்மதாஸ்**
97, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயம்:-
**A. பத்மதாஸ்**
ஊர்காவற்றுறை வீதி,
புளியங்கூடல் சந்தி.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 30-08-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது
Printed and Published by New Uthayan Publications Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Sunday August, 30, 1987.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org